**வவுனியா வடக்கு பிரதேச சபை**

**வவுனியா மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

------------------------

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

----------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 04 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஒக்தோபர் 31 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட ரூபா 47,700 கடன் தொகைகள் வருட இறுதியில் உள்ள ஊழியர் கடன் மீதியில் உள்ளடக்கப்படாமையால் ரூபா 47,700 ஆல் பதவியணியினர் கடன் மீதி குறைத்து கணக்கிடப்பட்டுள்ளது. இத்தொகை சபைக்கு சொந்தமான கடைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஆரம்ப பணத்தினை (key money) குறைத்துக் காட்டியதன் மூலம் சீர் செய்யப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் சபை எல்லைக்குட்பட்ட வீதி திருத்தத்திற்காக ரூபா 2,540,000 செலவழிக்கப்பட்ட மூலதனச் செலவின் பெறுமதி மீண்டுவரும் செலவினமாகக் காட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாக நிலையான

சொத்துக்களின் பெறுமதி கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(இ) இறுதிக்கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ள பயன்பாட்டுச் சேவைக்கான கடன்கள் மீதி ரூபா 6,470,877 ஓர் இனங்காணப்படாத மீதியாக காணப்படுகின்றது.

(ஈ) கணிப்பீட்டுச் சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட மேலதிகமாக உள்ள 298 பொருட்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு இறுதிக் கணக்கினுள் கொண்டு வரப்படாமையால் சபையின் சொத்துக்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(உ) சபையின் 2015 திசெம்பர் 31 இல் நிலுவையாகவுள்ள கடை வாடகை ரூபா 47,250 மீளாய்வாண்டில் வருமானமாக சேர்க்கப்படாமையால் சபையின் வருமானம் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

### 1.3.2 பெறவேண்டியவை

சேவையிலிருந்து ஓய்வு பெற்றோர், சேவையிலிருந்து நீக்கப்பட்டோர், இடமாற்றலாகி சென்றோர் ஆகிய ஊழியர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய உத்தியோகத்தர் கடன் நிலுவை ரூபா 221,043 ஐந்து வருடங்களிற்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 ஆவணச் சான்றுகள் இன்மை

கணக்காய்விற்குத் தேவையான தகவல்களும் சான்றுகளும் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 2,107,104 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒருமுறை எரிபொருளினால் தாங்கியை பூரணமாக நிரப்பி ஓட்டத்தில் ஈடுபடுத்தி எரிபொருள் நுகர்வினை பரீட்சிக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 1989 இன் பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதிக்கோவை | |
| (i) விதி 217 | சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற சகல காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி (V) 7 | உள்ளகக் கணக்காய்வு நடைமுறைப்படுத்தப்படவில்லை. |
| (iii) விதி 153 | கிடைக்க வேண்டிய வருமதிகளின் கூற்று (பி.ச.7) தயாரிக்கப்படவில்லை. |
| (iv) விதி 163 | வருமானப் பொழிப்பு பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை (பி.ச.19) |
| (v) விதி 60 | வருட ஆரம்பத்தில் சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தொழில் நிறுவனங்களின் விபரம் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (vi) விதி 165 | பிரதான ஏட்டில் பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் என்பன பதியப்பட்டிருக்கவில்லை. |
| (இ) அரச நிதி ஒழுங்கு விதி 1646 | மாதத்திற்கான வாகன ஓட்டப் பதிவேடு தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னதாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |

## 2. நிதி மீளாய்வு

--------------------

### 2.1 நிதிப்பெறுபேறுகள்

---------------------------

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் ரூபா 11,053,803 தேறிய மிகையாக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறிய மிகையாக

ரூபா 557,760 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 10,496,043 ஆல் அதிகரித்துள்ளமையை காட்டுகின்றது.

## 2.2 வருமான முகாமைத்துவம்

---------------------------------------

### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

பாதீட்டு மதப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையினாலும் மதிப்பீடு சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தப்படாமையினாலும் பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே வேறுபாடு ஏற்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணங்கள்

சபைக்குக் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணங்கள் ரூபா 1,854,537 வடக்கு மாகாண பிரதம செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளது.

### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

சபையினால் பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை ரூபா 1,708,764 ஆக இருந்ததுடன் கிடைக்க வேண்டிய முத்திரை தீர்வையை காணிப் பதிவாளரிடமிருந்து பெற நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.4 ஏனைய வருமானம்

விளம்பரக் கட்டணங்கள் சம்பந்தமாக விளம்பரப்படுத்தப்பட்ட பலகைகளுக்கு அறவிட வேண்டிய கட்டணங்களை அறவிடவும் விளம்பர கட்டணங்கள் செலுத்தப்படாத விளம்பர பலகைகளுக்குரிய நிறுவனங்களிடமிருந்து நிலுவையை அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

------------------------------------------------------------

சபையில் காணப்படும் 16 வாகனங்களின் உரிமையானது சபைக்கு உரியதாக இல்லாத போதும் அதன் உரிமை மாற்றம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.4 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 இல் கொள்வனவு செய்யப்பட்ட கைவிரல் வரவு பதிவு இயந்திரத்திற்காக ரூபா 28,000 செலுத்தப்பட்டிருந்த போதும் பாவனையில் ஈடுபடுத்தப்படாமலுள்ளது.

(ஆ) நெடுங்கேணி பிரதேச சபைக்கு வடக்கின் துரித மீளெளிச்சித் திட்டத்தினால் 2011 ஆகஸ்ட் 12 இல் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்ட ரூபா 26,137,591 பெறுமதியான பஸ் நிலையத்தினை பாவனைக்கு உட்படுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்**

சபையின் செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். எனினும் குறித்த சபையில் மீளாய்வாண்டில் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடைபெற்றிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

முறைமைகள், கட்டுப்பாடுகள் தொடர்பாக பின்வரும் விடயப் பரப்புக்களில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(i) வருமான சேகரிப்பு

(ii) நிலையான சொத்துக்கள்